**31. அநபாயன் கதை**

முன்காலத்தில் அநபாயன் என்னும் சோழவள நாட்டில் திருவாரூரில் பெயரையுடைய சோழமன்னன் ஒருவன்அரசாட்சி செய்துகொண்டிருந்தான். இவன் மனு நெறிப்படி அரசாட்சி புரிந்துகொண்டிருந்தபடியால் இவனைமநுநீதி கண்ட சோழன் என்றுங் கூறுவர். இவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு வீதிவிடங்கன் என்றுபெயரிட்டான். இவன் இளமைப் பருவத்திலேயே எல்லாக் கலைகளையும் ஓதி உணர்ந்து அவைகளில் வல்லவனானான். இவன் ஒரு நாள் தன்னுடைய தோழர்கள் புடைசூழத் தேரிலேறித் தெருவிலே சென்றான். அப்பொழுது பசுவின் கன்று ஒன்று துள்ளிவந்து, இவனுடைய தேரின் உருளையில் அகப்பட்டு நசுங்கிஅவ்விடத்திலேயே மாண்டு போய் விட்டது. கன்றை இழந்த பசு துடி துடித்தது; அரண்மனை வாயிலுக்குச் சென்றது. அங்குக்கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன்னுடைய கொம்பினால் ஆட்டி அடித்தது. ஆராய்ச்சி மணியொலி கேட்டஅரசன் கலங்கினான்;. வெளியே வந்தான்; உற்றதை



யோர்ந்தான்; அப்பசு வைப் போலத் தானும் துன்பத்தினையடைதலே தக்க தென்று முடிவு செய்தான். தன் மகனைக் கீழேகிடத்தித் தேரினை மேலே செலுத்து மாறுதன்னுடைய அமைச்சனுக்குக் கட்டளை யிட்டான். அவ்வாறு செய்தற்கு மனமிணங்காத அமைச்சன் தன்னுயிரைப் டைய போக்கிக்கொண்டான். பிறகு அரசனே தன்னு மைந்தனைத் தெருவுக்கு அழைத்துச் சென்றுஅவனைக் கீழே கிடத்தி அவன்மீது தேரினைச் செலுத்தினான். இறைவன் தோன்றி மன்னனுக்குத் திருவருள்வழங் கினார். இறைவனும் இயமனுமே இவ்வாறு அம்மன்னனு டைய செங்கோல் திறத்தை உலகிற்குணர்த்தப்பசுவாகவும் கன்றாகவும் வந்தனர் என்பர். அரசன் தன்னுடைய மகன் என்றும் பாராமல் நடுவுநிலைமை ஒன்றேதக்கதென்று மேற் கொண்டமையை அனைவரும் பாராட்டி இன்றளவும் அம்மன் னனைப் போற்றுகின்றனர். எல்லோரிடத்தும் ஒரே தன்மையாகச் செங்கோல் செலுத்துவதே அரசனுக்குச் சிறந்த அறமாகும்.

[செங்கோன்மை]